# பேச்சு வழக்கும் எழுத்து வழக்கும்

1. மான் பச்சப்புல்ல மேயுது.

   மான் பசும்புல்லை மேய்கின்றது.

2. பெரியவங்க சொல்றதக் கேக்கணும்.

   பெரியவர்கள் சொல்வதைக் கேட்க வேண்டும்.

3. அவங்க, மெரினாக் கடற்கரைக்குப் போனாங்க.

   அவர்கள், மெரினாக் கடற்கரைக்குப் போனார்கள்.

4. எனக்குத் தாகமா இருக்கு.

   எனக்குத் தாகமாய் இருக்கின்றது.

5. ராஜா, வீட்டுக்குள்ள நொழைஞ்சான்.

   ராஜா, வீட்டிற்குள் நுழைந்தான்.

6. அப்பா, நீங்க சொன்ன மாதிரி எழுதிட்டேன்.

   அப்பா, நீங்கள் கூறியபடி எழுதிவிட்டேன்.

7. நெகிழிப் பையப் பயன்படுத்தாத!

   நெகிழிப் பையைப் பயன்படுத்தாதே!

8. இந்த மண் பானய யாறு உடச்சது.

   இந்த மண் பானையை யார் உடைத்தது.

9. போன வகுப்புல என்ன பாடம் படிச்சோம்?

   சென்ற வகுப்பில் என்ன பாடம் படித்தோம்?

10. வள்ளி பூவப் பறிச்சி வந்தா.

    வள்ளி பூவைப் பறித்து வந்தாள்.